செ.வெ.எண்.126/2018 நாள்.22.03.2018

# ஆட்சிமொழிப் பயிலரங்கம் – கருத்தரங்கம்

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் ஆட்சிமொழிப் பயிலரங்கம், கருத்தரங்கம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட ஊராட்சி அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

ஆட்சிமொழிப் பயிலரங்கத்தை காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ஆ. நூர் முகமது அவர்கள் தொடங்கி வைத்தார். இப்பயிலரங்கில் ஆட்சிமொழி – வரலாறு / சட்டம், ஆட்சிமொழி செயலாக்கம் அரசாணைகள், மொழிப்பயிற்சி, மொழிபெயர்ப்பு – கலைச்சொல்லாக்கம், அலுவலகக் குறிப்புகள், வரைவுகள் செயல்முறை ஆணைகள் தயாரித்தல் மற்றும் ஆட்சிமொழி ஆய்வு மற்றும் குறைகளைவு நடவடிக்கைகளும் என்ற பொருண்மைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 100க்கு மேற்பட்ட அரசு அலுவலர் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஆட்சிமொழிக் கருத்தரங்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. பா.முருகேசன் அவர்கள் தலைமையேற்று நடத்தி 2015 ஆம் ஆண்டிற்கு ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கிய அலுவலகத்திற்கு கேடயம் மற்றும் சான்றிதழ், சிறந்த வரைவுகள் – குறிப்புகள் எழுதிய அரசுப் பணியாளர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரையாற்றினார். அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழியாகிய தமிழில் கோப்பு நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்றும் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் இப்பயிலரங்கம், கருத்தரங்கில் அனைவரும் சுயவிருப்பத்துடன் கலந்துகொள்ள வேண்டும் என்றும் தமிழின் பெருமைகளை எடுத்துரைத்தார். தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவை காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர் திரு. மு. இராமகிருஷ்ணன் அவர்கள் தமிழ் வளர்ச்சித் துறை வணிகர்களாகிய எங்களையும் அழைத்து கௌரவித்ததர்க்கு நன்றியும் வணிக நிறுவனப் பெயர் பலகைகளில் அனைவரும் தமிழிலேயே பெயர்ப்பலகை வைக்க தாம் வலியுறுத்துவதாகவும் கருத்துரை வழங்கினார். காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா அறிவு வளர்ச்சி மன்றத் தலைவர் கவிஞர் கூரம் துரை அவர்கள் தமிழ் வளர்ச்சித் துறையால் தமக்கு பேரறிஞர் அண்ணா விருது கிடைக்கப்பெற்றதாகவும் மேலும், தமிழ் மொழி வளர்ச்சிக்காக பாடுபடுவேன் என்றும் கருத்துரை வழங்கினார். இப்பயிலரங்கத்தில் கலந்து கொண்ட அனைத்து அலுவலகங்களுக்கும் அம்மா மென்தமிழ் சொல்லாளர் குறுந்தகடு வழங்கப்பட்டது. புலவர் ப. ஆறுமுகம் அவர்கள் நன்றியுரை வழங்கி நாட்டுப்பண்ணுடன் கருத்தரங்கம் நிறைவுற்றது. காஞ்சிபுரம் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திருமதி க. பவானி அவர்கள் இப்பயிலரங்கக் கருத்தரங்க பணிகளை மேற்கொண்டார்

செய்தி வெளியீடு,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

காஞ்சிபுரம்